**DEPOSITION OF WITNESS**

(ChapterXXIII Code of Criminal Procedure)

**-----------**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT,No.I, PERAMBALUR**

**CC.No.246/2022**

**Date : 07.01.2025**

**PW3 பாலசுப்பிரமணியன் (வனக்காவலர்) த/பெ. பெரியசாமி**

**முதல் விசாரணை தொடர்ச்சி**

நான் இந்த வழக்கில் ஏற்கெனவே 25.03.2024 அன்று சாட்சியம் அளித்துள்ளேன். நான் இந்த வழக்கில் படிவம் 95 ஐ பதிவு செய்தேன். **நான் தயார் செய்த படிவம் 95 அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1 மற்றும் 2 வது எதிரிகளை சம்பவ இடத்திலேயே 2.00 மணிக்கு கைது செய்துவிட்டோம். எதிரிகளை பிடித்த பிறகுதான் வாக்குமூலம் வாங்கினோம். வனச்சரகர் சம்பவம் தொடர்பாக மாவட்ட வன அலுவலருக்கு தகவல் கொடுத்தாரா என்று தெரியவில்லை. நான் வனக்காப்பாளராக இருக்கிறேன். எனக்கு மேல் வனவர் இருக்கிறார். எனக்கு படிவம் 95 ஐ தயார் செய்ய அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல, அதிகாரம் உள்ளது. வேட்டை நடக்கபோகிறது என்று தெரிந்துதான் சம்பவ இடத்திற்கு சென்றோம். வேட்டை நடைபெறபோகிறது என்பதை 1/2 மணி நேரம் இருந்து பார்த்தோம். வேட்டை நடந்த பிறகு எதிரிகளை பிடித்தோம். வேட்டையை நடைபெறாமல் தடுக்க முயற்சி செய்யவில்லை என்றால் சரிதான்.

கைப்பற்றப்பட்ட TN46X2640 பதிவு எண் கொண்ட Honda Shine வாகனம் யாருக்கு சொந்தமானது என்று நான் விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை. சம்பவ இடத்தில் ஆவணங்கள் 3/4 மணி நேரத்தில் தயார் செய்யப்பட்டது. டார்ச் லைட் வெளிசத்தில் தயார் செய்யப்பட்டது. 3 டார்ச் லைட்டுகள் இருந்தது.

அவைகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. டார்ச் லைட் குண்டு பல்ப் கொண்டது. எனக்கும், வனச்சரகருக்கும் 5 மீட்டர் தூரம் இருக்கும். என்னிடமிருந்து வனவர், வனச்சரகர் புகார் எதுவும் வாங்கவில்லை. சம்பவ இடத்தில் ஆவணங்களை தயார் செய்துவிட்டு சொத்துக்களை கைப்பற்றி கொண்டு அலுவலகம் வந்துதான் W.L.OR. தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

நான் படிவம் 95 ஐ வன அலுவலகத்தில் வைத்து தயார் செய்தேன். இந்த குற்றத்திற்கும், எதிரிகளுக்கும் சம்மந்தமில்லை என்றாலும், யாரோ செய்த குற்றத்திற்கு எதிரிகளை பலிகாடாக்கிவிட்டோம் என்று சொன்னால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.